Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR**
Case No. **CC.NO. 92/2023**

**DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 7 Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. சுரேஷ் | **தொழில்** | காவல் ஆய்வாளர் |
| **த/க பெயர்** | திரு. சின்னராஜ் | **கிராமம்/ ஊர்** | ராயக்கோட்டை |
| **வயது** | 45 | **மாவட்டம்** | கிருஷ்ணகிரி |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 22nd day of July 2026
**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை.-</u>**

நான் தற்போது தருமபுரி மாவட்டம், ஏரியூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் திரு. உலகநாதன் அவர்கள் சம்பவ இடம் சென்று மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து, சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத விசாரணை அறிக்கை பெற்று, அதன் பின்னிட்டு இறந்தவரின் பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவரை விசாரணை செய்து பிரேத பரிசோதனை அறிக்கையும், வாக்குமூலமும் பெற்று, பின்னர், மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை என் வசம் ஒப்படைத்தார். வழக்கினை மேல் விசாரணைக்காக எடுத்துக்கொண்ட நான் வாகனத்தை பரிசோதனை செய்த மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலமும், ஆய்வறிக்கையும் பெற்றேன். **(அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்தேன். பின்பு எனது விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 279,304 (A)ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் முதற்கட்ட விசாரணை செய்த காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்த சாட்சிகளை நான் மீண்டும் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன், அவரிடம் கூறிய விவரங்களையே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் மீண்டும் பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்து, ஆவணங்களை பரீசீலனை செய்து உண்மை தன்மை அறிந்த பின்னர்தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய இயலும் என்றால் சரிதான். இவ்வழக்கின் ஆவணங்களை நான் பரிசீலனை செய்தேனா என்றால் செய்தேன். பிரேத விசாரணை அறிக்கையில் 3 வது நிரலில் எந்த தேதியில் எத்தனை மணிக்கு விபத்தில் இறந்தவர் மருத்துவமனையில் காணப்பாட்டார் என்ற விவரம் உள்ளது என்றால் அது குறித்து முதற்கட்ட விசாரணை செய்த அதிகாரியை விசாரித்தால் தெரிய வரும். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையில் 3 வது நிரலில் எந்த தேதியில் எத்தனை மணிக்கு விபத்தில் இறந்தவர் மருத்துவமனையில் காணப்பாட்டார் என்று உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. அப்படி என்றால் முதற்கட்ட விசாரணை செய்த அதிகாரி சமர்பித்த ஆவணங்களை நான் சரியாக பரிசீலனை செய்யவில்லை என்றால் சரியல்ல. 25.10.2020 அன்று 20.45 மணிக்கு விபத்தில் இறந்தவரின் பிரேதம் மருத்துவமனையில் காணப்பட்டது என்ற விவரத்தை மறைத்து அரசு தரப்பு வழக்கை பாதிக்காதவாறு நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் சிக்கிய வாகனத்தை எந்த தேதியில் நான் ஆய்விற்கு அனுப்பினேன் என்றால் 14.09.2022 அன்று அனுப்பினேன். விபத்து ஏற்பட்டதற்கும் ஆய்விற்கு அனுப்பியதற்கும் இடைப்பட்ட காலத்தில் வாகனம் யாருடைய பொறுப்பில் இருந்தது என்றால் காவல் நிலையத்திலேயே இருந்தது. சுமார் 2 ஆண்டு கால தாமத்திற்கான காரணம் என்னவென்றால் வாகனத்தின் நெம்பர் பிளேட் கழன்று இருந்ததால் கால தாமதம் ஏற்பட்டது. அப்படியிருக்க எவ்வாறு பதிவு எண் கண்டு பிடிக்கப்பட்டது என்றால் எஞ்சின் எண் மற்றும் சேசிஸ் எண் மூலமாக. எதன் அடிப்படையில் மேற்படி விவரத்தை தெரிந்து கொண்டேன் என்றால் Echallan Machine மூலமாக கண்டறியப்பட்டது.அதற்குறித்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி தகவலை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாகனத்தின் உரிமையாளர் குறித்து தெரிந்து

கொள்ள சாட்சிகளை நான் விசாரித்தேனா என்றால் இல்லை. அரசு தரப்பு வழக்கு பாதிப்படையும் என்பதற்காக நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தை யாராவது உரிமை கோரி காவல் நிலையத்தை அணுகினார்களா என்றால் சரியாக தெரியவில்லை. மேற்படி வாகனம் திருடப்பட்ட வாகனமா என்பது குறித்து விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் சரியாக தெரியவில்லை. மோட்டார் வாகன ஆய்வாளரை நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் நிரல் 19 ல் கூறிய விவரம் என்னவென்றால் மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்தால் தெரியவரும். அரசு தரப்பு வழக்கு பாதிப்படையும் என்பதற்காக மேற்படி தகவல்களை நான் கூற மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி வாகனத்தை ஆய்விற்கு அனுப்பி முறையாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. மோட்டார் வாகனஆய்வாளர் மேற்படி வாகனம் விபத்து ஏற்பட்டு 1 வருடம் 11 மாதங்கள் கழித்து ஆய்வுக்கு அனுப்பட்டுள்ளதால் விபத்திற்கான காரணத்தை கண்டறிய இயலவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மருத்துவரை நான் விசாரித்தபோது இருசக்கர வாகனம் மோதி விபத்தில் இறந்தவருக்கு மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரியை விசாரித்தால் தான் தெரியவரும். விபத்தில் இறந்தவருக்கு முதற்கட்ட சிகிச்சை அளித்த மருத்துவரை நான் விசாரித்தேனா என்றால் முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரியை விசாரித்தால் தான் தெரியவரும். இவ்வழக்கில் பட்டியல் சாட்சிகளை தவிர இதர கூடுதல் சாட்சிகளை நான் ஏன் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட அதிகாரியிடம் கூறிய விவரங்களையே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. விபத்தில் இறப்புற்ற நபருக்கு முதற்கட்ட சிகிச்சை அளித்த மருத்துவரை நான் ஏன் விசாரிக்கவில்லை என்றால் முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட அதிகாரியிடம் கூறிய விவரங்களையே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. முதற்கட்ட சிகிச்சை அளித்த மருத்துவர் எத்தனையாவது பட்டியல் சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ளது எதிரிக்கு வழங்கப்பட்ட நகலிலேயே மேற்படி தகவல் உள்ளது. மேற்படி தகவல் எதிரிக்கு வழகங்கப்பட்ட நகலில் இல்லாததால் சட்டத்திற்கு முரணாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள வீட்டின் உரிமையாளர்களை நான் பட்டியல் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் இறப்புற்ற நபரின் உறவினர்கள் மற்றும் ஊர்க்காரர்களை மட்டுமே சாட்சிகளாக சேர்க்கப்பட்டு

விசாரணை நடைபெற்றுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சாட்சிகளை விசாரித்து பட்டியல் சாட்சிகளாக சேர்த்ததிருந்தால் அரசு தரப்பு வழக்கு பாதிப்படையும் என்பதற்காக நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் விபத்தில் எவ்வாறு தொடர்புபடுத்தப்பட்டார் என்று முதற்கட்ட விசாரணை அதிகாரியிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் ஆவணங்களின் அடிப்படையில் தெரிந்து கொண்டேன். எந்த ஆவணம் என்றால் சாட்சிகள் அளித்த வாக்குமூலத்தில் அடிப்படையில் தெரிந்து கொண்டேன். எந்த சாட்சி என்றால் சாட்சி சங்கர் என்பவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் தெரிந்து கொண்டேன். விபத்திற்கு எத்தனை நாட்கள் கழித்து குற்றம் சாட்டப்பட்ட நபர் காவல் நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார் என்றால் 26.10.2020 அன்று. குற்றம் சாட்டப்பட்ட நபர் தானகவே சரண்டர் ஆனாரா அல்லது கைது செய்யப்பட்டாரா என்றால் சரியாக தெரியவில்லை. புலன் விசாரணை அதிகாரியான நான் சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை மீண்டும் சரிவர விசாரணை செய்யாமல், புள்ளிவிவர கணக்கிற்காக அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

முதல் தகவல் அறிக்கை எந்த பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் இதச பிரிவுகள் 279, 337 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பிரிவு மாறுதல் அறிக்கையானது எந்த தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 25.10.2020 அன்று. மேற்படி பிரிவு மாறுதல் அறிக்கையானது அ.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>மீண்டும் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 மருத்துவமனையில் இறப்புற்ற நபரை பார்த்தபின்னர், தான் மருத்துமவனையிலேயே புகார் அளித்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியாக தெரியவில்லை. மேற்படி புகாரை காவல் துறையினரே பெற்றுக்கொண்டதாக கூறியுள்ளதால் நான் சரிவர விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை

| | |
|---|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct. | |
| | KOVENDHAN S<br>JUDICIAL MAGISTRATE NO.II<br>Digitally signed by KOVENDHAN S<br>DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN<br>Location: TIRUPATHUR |
| Signature of Witness | Judicial Magistrate No.II<br>Tirupathur. |